★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: கார்த்திகை 4உ திங்கள் (19—11—56) ★ ★ வெளியூர்: கார்த்திகை 5உ செவ்வாய் (20—11—56) [இதழ் 138

இனமண்டலச் சட்ட கொடுமை!

இந்தியர்களின் சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன

ஜோகன்ஸ்பர்க் நவ. 18—

கிரகர்ஸ்டார்ப் நகரில் 700 இந்தியர்கள் உள்ளனர்; அங்கு இனமண்டலச் சட்டம் அமுலுக்கு வந்தால், அவர்கள், ரூ. 1½ கோடி மதிப்புள்ள சொத்துக்களை இழக்க நேரிடும். ஒரே நகரத்தில் இந்த நிலை என்றால், தென்னாப்பிரிக்காவில், இந்தியர்களுக்கு என்ன பயங்கர சூழ்நிலை நிலவுகிறது என்பதும், அவர்களின் எதிர்கால வாழ்வு எவ்வளவு பாதிக்கப்பட்டுள்ளது என்பதும் நன்கு விளங்கும்.

ஐ. நா. சபை இருக்கும்போது காமன்வெல்த் அமைப்பு ஏன்?

சாம்ராஜ்ய அந்தஸ்தை இழந்துவிட்டபிரிட்டனின்சூழ்ச்சிக்கு டெல்லி சர்க்கார் பலியாகிவிட்டது

இணைந்திருப்பதால் இழுக்குதானே!

சூயஸ் பிரச்சினை தோன்றும்முன்பே கழகம் குரல் எழுப்பியிருக்கிறது

காமன்வெல்த் எதிர்ப்பு தினப் பொதுக்கூட்டத்தில் துணைப்பொதுச்செயலாளர் என்.வி.நடராசன்முழக்கம்

"காமன்வெல்த்திலிருந்து இந்தியா விலக வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கடந்த 1951-ல் சென்னையில் நடந்த திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநில மாநாட்டில் நாங்கள் தீர்மானம் நிறைவேற்றினோம். இப்போது எகிப்தில் பிரிட்டன் அநியாயமாக நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் சூயஸ் பிரச்சினை தோன்றுதிருந்த அன்றே நாங்கள் குரல் எழுப்பினோம்!

"உலகில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் 'ஜபர்தஸ்து' சரிந்ததும், பிரிட்டன் வேறொரு தந்திரத்தைக் கையாள ஆரம்பித்தது; குடியேற்ற நாடுகள் என்று கூறப்படும் நாடுகளையெல்லாம் கூட்டி ஒரு அமைப்பு ஏற்படுத்தி தந்திரமாக - மறைமுகமாகப் பிரிட்டன் தனது சாம்ராஜ்ய வெறியை—சாம்ராஜ்யப் பேராசையைக் காட்டி வருகிறது; இதில் இந்தியாவும் சிக்கிவிட்டது.

"பிரிட்டன் தலைமை வகிக்கும் இந்த அமைப்பில் இலங்கையும் அங்கம் வகிக்கிறது; இந்தியாவும் அங்கம் வகிக்கிறது. ஒரே அமைப்பில் இருக்கும் இலங்கையில் தமிழர்கள்மீது அக்கிரமமாக நடந்துகொள்கிறது, அங்குள்ள சர்க்கார்! அதைத் தட்டிக் கேட்க பிரிட்டனுக்கு விருப்பம் இல்லை; இந்தியாவுக்கு அதைக் கேட்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. அப்போதே இந்த காமன்வெல்த், இலங்கையின் இந்தச் செய்கையை, ஏன் என்று கேட்டிருந்தால் இப்போது பிரிட்டன் எகிப்துமீது போர் தொடுத்திருக்க முடியாது.

"அந்த நாட்களிலிருந்து தொடர்ந்து நாங்கள் ஏடுகளிலும், மேடைகளிலும், மாநாடுகளிலும் கூறிவருகிறோம்—'காமன்வெல்த்திலிருந்து இந்தியா வெளியேறவேண்டும்' என்று! காமன்வெல்த்திலுள்ள அக்கிரமங்களையும், அதில் இணைந்துள்ளதால் இந்தியா இழந்துள்ள மதிப்பையும் நாங்கள் அடிக்கடி சுட்டிக் காட்டி வந்திருக்கிறோம்.

"மேலும், உலகத்திற்கே ஒரு தனிப் பொது நிறுவனமான ஐ. நா. சபை இருக்கும்போது, இதுபோன்ற ஒரு தனி அமைப்பு ஏன்?—என்று நாங்கள் கேட்கிறோம்; இதனை ராஜீயவாதிகள் அனைவரும் உணர்ந்தாகவேண்டும்.

"ஐ நா. சபை ஒரு மகத்தான நிறுவனம். எகிப்து மீது பிரிட்டன் போர் தொடுத்ததும் ஐ நா தலைவர்கள் உத்திரவிட்டதும் ஐ. நா. படைகள் அங்கு போகவில்லையா? இப்படி அகில உலகப் பிரச்சினைகளையும் கவனிக்கும் பொது நிறுவனமாக அது இருக்கும்போது, 'காமன்வெல்த்,' 'சீட்டோ,' 'நேட்டோ,' போன்ற குட்டி அமைப்புகள் ஏன்? எதற்காக? அவசியமே இல்லையே! இந்த அமைப்புகள் எல்லாம் ஏகாதிபத்திய அரசுகளின் வடிகட்டிய பித்தலாட்டம் என்றே திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது,"

—என்று தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், நேற்று மாலை சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில், திரு. எச் டி இராசா தலைமையில் நடைபெற்ற 'நவ. 18: காமன்வெல்த் எதிர்ப்பு தினப்' பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

ஐ. நா.-வுக்குப் புறம்பான அமைப்பு

மேலும் அவர் கூறியதாவது:—

"இந்தக் காமன்வெல்த்தை மட்டுமின்றி, உலகில் வேறு எந்த சிறுசிறு அமைப்புகளையும், எந்த ஒரு நாடானாலும்—அது அமெரிக்காவாக இருந்தாலும் ரஷ்யாவாக இருந்தாலும், பிரிட்டனாக இருந்தாலும்—உருவாக்குமானால் அந்த நாடுகளையெல்லாம், உலகில் குழப்பத்தை உண்டுபண்ண விரும்பும் ஏகாதிபத்திய வல்லரசுகள் என்றே நாங்கள் கருதுகிறோம்.

ஐ. நா.-வை கேலி செய்வதாகும்

'பத்துபேர் கூடிப்பேசி ஒரு காரியத்தில் முடிவு கட்டினபின், இரண்டு மூன்றுபேர் தனித் தனியாக இரகசியமாகக் கூடிப் பேசி தனி முடிவெடுப்பதினால் எப்படி அனைவருடைய முடிவையும் கேவலப்படுத்துவதாக அமையுமோ, அதுபோலத்தான் உலக நாடுகளெல்லாம் கலந்து முடிவெடுத்து நிறுவிய ஒரு அமைப்பை கேவலப்படுத்துவதாக அமைந்திருக்கின்றன இந்த சிறு அமைப்புகளெல்லாம்!

வல்லரசுகளையும் தட்டிக்கேட்கும்

"1945-ல் ஐ நா. சபை உருவானபோது நமது தேசியத் தலைவர்களெல்லாம் 'இந்தச் சபை உருப்படுமா?'—என்றுதான் கேட்டனர். அதற்கு முன்பிருந்த 'லீக் ஆப் நேஷன்ஸ்' நிறுவனம்போல இதுவும் பிசுபிசுத்துவிடும் என்றுதான் கூறினார்கள். ஆனால் இன்று காணப்படுகிற நிலை என்ன? ஐ. நா. சபை மேலும் மேலும் வளர்ந்து உரம் பெற்று வருகிறது. ஆதிபத்திய வல்லரசுகளான பிரிட்டன், பிரான்சு ஆகிய நாடுகளைக்கூட, அவற்றின் தவறைச் சுட்டிக்காட்டி தட்டிக் கேட்கும் ஆற்றல் பெற்றிருக்கிறது. உலகில் அநேகமாக எல்லா பிரச்சினைகளையுமே அது கவனிக்கக் கூடியதாக வளர்ந்துகொண்டிருக்கிறது.

"ஐ. நா.-வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை எடுத்துக் காட்டித்தான் ரஷ்யா, பிரிட்டனையும் பிரான்சையும் எச்சரிக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

"இப்படிப்பட்ட ஒரு அகில உலகநிறுவனம் இருக்கையில் காமன்வெல்த் போன்ற மற்ற சிறு அமைப்புகள் இருப்பது மகாக் கேவலமானதாகும். அந்தக் காமன்வெல்த் அமைப்பில்தான் நேரு சர்க்கார், இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரையும் இணைத்துக் கேவலப்படுத்துகிறார்கள்; தமிழ் நாட்டில் இருக்கும் தமிழர்களாகிய நமக்கும் அந்த அவமானத்திலே பங்கு இருக்கத்தான் செய்கிறது.

"தன்னுடைய படைகளை அனுப்பி வல்லரசுகள் என்று கூறிக்கொள்கிற நாடுகளின் தலையில் குட்டும் அளவிற்கு

(4-ம் பக்கம் பார்க்க)

'சட்டம், சமுதாய வளர்ச்சிக்குத் துணை செய்யவேண்டும்'

'சமுதாயத்தை கட்டுப்படுத்துவதாக சட்டம் இருத்தலாகாது'

மதுரை தியாகராசர் கல்லூரியில் ஈ. வெ. கி. சம்பத் ஆய்வுரை

'சட்டமென்பது சமுதாயத்திலுள்ள மக்கள் தங்களுக்குள்ளாகவே ஏற்படுத்திக்கொண்ட வரையறை. அம்முறை என்றும் ஒரே அளவில் இருக்க முடியாது. சமுதாயம் முன்னேற முன்னேற, அதற்கேற்ப சட்டங்களும் மாறிக்கொண்டே வருகின்றன. சட்டங்களும் சமுதாயத்திற்கேற்ப வளர்ந்துகொண்டேதான் வந்திருக்கின்றன.

"சமுதாயத்தில் என்றும் மாற்றம் அவசியம். மாற்றம் வேண்டாமென்று மதவாதிகளோ மற்றவர்களோ கூறினாலும் சமுதாயம் மாற்றத்தை நாடியே ஓடிக்கொண்டிருக்கிறது. மாற்றம் இன்னமுறையில்தான் இருக்க வேண்டுமென்று கருத்து வேற்றுமைகள் இருக்கலாமே யொழிய, மாற்றமே தேவையற்றது என்று கூறுவது பகுத்தறிவுக்கு ஒவ்வாததாகும்.

"நாம் இப்பொழுது, டார்வின் கூற்றுப்படி மனித சமுதாயம் குரங்கிலிருந்து துவங்கி தற்காலம்வரை வளர்ந்து வந்திருக்கும் வகையை ஆராய்வோமானால், வியக்கத்தக்க மாறுதல்களும் மாற்றங்களும்சமுதாயத்திடையே ஏற்பட்டிருப்பதை உணரலாம். சமுதாயமாக வாழ்கின்ற உணர்ச்சி, மனித சமுதாயத்திற்கே உரித்தான ஒரு முறையாகும். இதிலேதான் மனித இனம் விலங்கினத்திலிருந்து வேறுபட்டுள்ளது.

"ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த மனித சமுதாயத்திற்கும் தற்பொழுதுள்ள சமுதாயத்திற்குமிடையே நிகழ்ந்துள்ள மாற்றங்கள் ஏராளம். ஆனால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த புலியினது வாழ்க்கை முறைக்கும் இன்றைய புலியின் வாழ்க்கை முறைக்கும் எவ்வித வேறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லை.

"சமுதாயம் வளர்வதற்குத் துணையாகச் சட்டம் இருக்கவேண்டுமேயொழிய, சமுதாயத்தைக் கட்டுப்படுத்துவதற்காக சட்டம் வேண்டியதில்லை. அண்ணா அவர்கள், 'சட்டம் என்பது ஓர் இருட்டறை; அதில் வக்கீலின் வாதம் ஓர் விளக்கு' என்று சட்டத்திற்கு விளக்கம் கூறியதை நினைவிற்கொள்ள வேண்டியது அவசியம். இதை ஏன் கூறுகிறேனென்றால், சட்டம் ஏழைகளால் அணுக முடியாதது என்பதற்காகத்தான். 'சட்டம் ஓர் கழுதை'யென்று மற்றொரு மேனாட்டறிஞர் கூறியுள்ளார். இதைப்போல, சட்டத்தைப் பற்றிப் பலர் பலவாறு கூறியதை நாம் காணலாம் எனவே, சட்டமும் சமுதாயமும் ஒன்றுக்கொன்று அதிகத் தொடர்புடையதாக இருத்தல்வேண்டும். காலத்திற்கேற்ப சமுதாயம் வளரவேண்டும்."

இவ்வாறு, மதுரை தியாகராசர் கல்லூரி இளங்கோ மன்றத்தில் கடந்த 10-ந் தேதியன்று நடைபெற்ற சிறப்புக்கூட்டத்தில் 'சட்டமும் சமுதாயமும்' என்ற தலைப்பில் தோழர் ஈ வெ. கி சம்பத் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

சிறப்புக் கூட்டத்திற்கு திரு. சுந்தரம் அவர்கள் தலைமை வகித்தார்.

கூட்டத் துவக்கத்தில் மாணவர் தலைவர் ஏ. எஸ். மணி வரவேற்புரையாற்றினர்.

இறுதியில் மன்றச் செயலாளர் தோழர் இரா. திருவேங்கடம் நன்றி கூறினர். (ந.-தி.)

தமிழவேள் பி. டி. இராசன் தலைமையில் அண்ணா சொற்பொழிவு

நண்பர்கள் கழகத்தவர் தேர்தல் நிதிக்கு ரூ. 1,111 வழங்கினர்

சென்னை, நவ. 19—

சென்னை நண்பர்கள் கழகத்தின் சார்பில் நேற்று காலை 10-மணியளவில், கோகலே மண்டபத்தில் ஓர் சிறப்புக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் அண்ணா அவர்களிடம் கழகத்தவர், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக ரூ. 1,111 வழங்கினர்.

கூட்டத்திற்கு ரூபாய் ஒன்று நுழைவுக் கட்டணமாகச் செலுத்தி ஏராளமானோர் கலந்து கொண்டனர்

தோழர் டி. சண்முகம் எம். எல் ஏ, அவர்கள் முன்மொழிய, தோழர் சந்திரசேகரன் வழிமொழிய, கூட்டத்திற்குத் தமிழ் நாட்டின் பண்பாளர் தமிழவேள் பி. டி இராசன் எம்.எல்.ஏ., அவர்கள் தலைமை தாங்கினர்கள்.

தலைவர் அவர்களின் முன்னுரைக்குப்பின், அண்ணா அவர்கள் 'தோழமை' எனும் பொருள் குறித்து அரியதோர் சிறப்புரை ஆற்றினர்கள்.

தலைவர் முடிவுரைக்குப்பின் தி. மு. கழக துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது. (ர.-தி.)

நம் நாடு
தி.மு.கழக தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 19—11—'56 திங்கள்

சிக்கனமாம், சிக்கனம்!

'அரிசி முதலிய அத்தியா வசியப் பொருள்களின் விலை இமயமென உயர்ந்து கொண்டே செல்கின்றது.

'கடினமாகத்தான் உழைக்கிறோம்; என்றாலும், வாழ்க்கை பெரும் பாரமாகத் தோன்றுகிறது. விலை ஏற்றத்திற்கு ஒத்து, வருவாய் அதிகரிக்கவும் வழியில்லை. இதனால் அரைப் பட்டினி நிலை கால் பட்டினி நிலைக்கு வேகமாக வழிவிட்டுக் கொண்டிருக்கிறது.

"எங்களில் பலருக்கு ஏற்கனவே வேலையில்லை—திண்டாடித் தெருவில் நிற்கிறோம்; பலர் பற்றாக்குறை வருமானத்தால், மத்தடிபட்ட தயிர்போல கலங்கிக் கிடக்கிறார்கள்; தவிக்கிறோம்.

"ஏறிய விலைகள் இறங்கும் என்கிறார்கள்; அதற்கான அறிகுறியே காணோம்.

"வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வழிசெய்து வருகிறோம் - என்று கூறப்படுகிறது; வழி, எங்கள் கண்ணுக்குப் புலப்படுவதாயில்லை; என் செய்வோம்! எங்களை ஆளவந்தார்கள் இதெல்லாம் பற்றிக் கவலைப்படுவதாகவே காணோம்!"

இப்படிப் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்; விவசாய—தொழிலாள - பட்டாளி - நடுத்தர மக்கள் எல்லாம்!

இவர்கள் இன்றைய காங்கிரசாட்சியில் அனுபவித்து வரும் கொடுமைகளுக்கு—கஷ்ட நஷ்டங்களுக்கு அளவே இல்லை; அவற்றை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை.

'சிக்கனமாயிருங்கள்; சீரான வாழ்வு பெறுவீர்,' என்று ஒரு குரல் கல்கத்தாவிலிருந்து கிளம்பி ஒலிக்கிறது, நாடெங்கும்!

இமயம் முதல் குமரிவரை, கல்கத்தா முதல் பம்பாய் வரை இந்த இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் காங்கிரஸ் கட்சியினர்தான், இந்தக் குரலை எழுப்பியிருக்கின்றனர்!

'வெந்த புண்ணிலே வேல் சொருகுகின்றனர்,' என்பர் இதயமபடைத்தோர்! நொந்து போன மக்களைக் கேலி செய்கின்றனர், காங்கிரசார்!

வாழ்வு! வாழ்வு! வாழ்வு!.... என்று ஏங்கித் தவித்துப் புலமபியழுது கொண்டிருக்கும் மக்கள் கூட்டம்! ஐயகோ! கொஞ்சம் சிந்தனை மட்டும் செலவு செய்தால்....!

'சிக்கனமாயிருங்கள்'!

'எத்தனை கனிவானது? எத்தனை பலன் தருவது?'—என்று எண்ணிக்கொண்டு இந்த உபதேசத்தை அளித்தார்களா?

'உள்ளதைக்கொண்டு நல்லதைச் செய்! வகையாக வாழ வேண்டும் என்று ஆசை கொள்ளாதே! இது இல்லையே-அது இல்லையே என்று ஏங்காதே! காதொடிந்த ஊசியும் உன் கடைநாளில்கூட வாராது! உலகே மாயம்! வாழ்வே மாயம்! இந்த வாழ்வில் நாம் காணும சுகமே மாயம்! எதுவும் இந்த உலகில் நம்பக்கூடியதல்ல—நிலைத்து நீடித்து நிற்பதல்ல; நீரிற் குமிழிபோன்றது! இங்கு நீங்கள்பெறும் இன்பங்கள் எல்லாம் சிற்றின்பங்கள்! இவற்றிற்காக உன் மனிதப் பிறவியைப் பாழ்படுத்திவிடாதே! பேரின்ப ஞானங்களைப் பெற, பரமண்டலப் பிதாவின் பாதார விந்தங்களில் உன் தலையைத் தாழ்த்த, நிலையான இன்பம் பெற, இந்த உலகத்தை - அதில் கிடைக்கும் உயரிய நல்வாழ்வை, சுகத்தை, இன்பத்தை எவற்றையும் நம்பாதே! துன்பம், உன்னைச் சோதிக்கும் தெய்வக் கட்டளை! எதற்காகவும் ஏங்காதே! எல்லாவற்றையும் மறந்துவிடு! பற்றுக்களைத் துறந்துவிடு! பற்றற்றவனாய், நிர்மலனாய், நித்தியானந்தத்தை நாடு' என்ற உபதேசங்களால், இந்த நாட்டு மக்கள், வாழ்வைப் பறிகொடுத்துத் தவிப்பது போதாதாம்! 'சிக்கனமாயிருங்கள்' என்ற உபதேசமும் தேவைப்படுகிறதாம்! --அளித்திருக்கிறார்கள், காங்கிரசார்!

நெஞ்சு பொறுக்குதில்லை, இந்த நிலைகெட்டவர்களை நினைந்துவிட்டால்!

கொட்டும் வறுமை! முதுகை வளைக்கும் வரிச்சுமை! செல்வம் பறிபோகும் கொள்ளை! உழைப்பு மலிவாக்கப்படும் கொடுமை! அகவிலை ஏற்ற அநியாயம்--இவற்றைத் தாங்கிக் கண்ணீர் சிந்திக் கலங்கிக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்திற்கு, காங்கிரசார் தரும் ஆறுதல், 'சிக்கனமாயிருங்கள்!'

வேடிக்கையான வேதனையாயிருக்கிறது, உபதேசம்!

மக்களைக் கசக்கிப் பிழிந்து வாங்குகிறார்கள் - வரி, வரி, வரி - என்று!

அப்படி வாங்கும் வரியை வகைதொகையின்றிச் சிந்திச் சீரழிக்கிறார்கள் - பாழ்படுத்துகிறார்கள், கோடிக்கணக்கில் - ஆளத்தெரியாத இலட்சணத்தால்!

இவர்கள் நாட்டுக்குத் தரும் உபதேசம் 'சிக்கனமாயிருங்கள்,' - வேடிக்கையாகத்தானே இருக்கிறது?

இவர்கள் சிந்திச் சீரழிக்கும் மக்களின் வரிப்பணம், மக்கள் சிக்கனமாயிருப்பதால் கிடைக்கும் என்று இவர்கள் எதிர்பார்க்கிற தொகையைவிட, பலமடங்கு அதிகமாயிற்றே!

மக்கள் சிக்கனமாயிருக்க வேண்டுமாம்! ஏனென்றால், இப்போது மக்கள் எல்லாம், கோலாகலமான வாழ்வு பெற்று, வெள்ளிக் காசுகளை வீதியில் இறைத்துக்கொண்டிருக்கிறார்களல்லவா, செலவு செய்ய வகை தெரியாமல்! அந்தக் காசுகளைச் சேமித்து இவர்களிடம் தரவேண்டும் என்கிறார்கள் போலும்!

கொடுமை! மக்களுக்கு இவர்கள் வாழ்வு தருவதாகச் சொல்லி, ஒன்பதாண்டுகளுக்கு மேலாக ஏமாற்றிவருவதே மிகப்பெரிய கொடுமை! அந்த இலட்சணத்தில் 'சிக்கனமாக இருங்கள்' என்று இந்த காருண்யமிக்கவர்கள் உபதேசிப்பது, அளவில்லாக் கொடுமையாகும். அதனினும் கொடுமை, ஆளத்தெரியாத போக்கால், மக்களின் வியர்வைத் துளிகளை--வரிப்பணத்தைக் கோடி கோடியாகப் பாழாக்கிக் கொண்டிருப்பது!

இந்தக் கொடுமைக் குணாளர்கள், மக்கள் தங்களிடம் செலவழிக்கக் கூடியதாயுள்ள சிந்தனையைச் செலவிடும்வரை, இதுபோன்ற கொடுமைகளைச் செய்யத்தான் செய்வர்!

செலவிடுங்கள், தாயகத் தோரே—இந்தக் கொடுமைக் குணாளர்களை இன்னும் ஆட்சி பீடத்தில் அமர்த்தி வேடிக்கை பார்க்கத்தான் வேண்டுமா?- என்ற கேள்விக்கு உங்கள் சிந்தனையைக் கொஞ்சம் செலவிடுங்கள்! பதிலளியுங்கள், தக்க தருணத்தில்!

காஷ்மீரை நினைத்துக்கொண்டாரா நேரு?

ஹங்கேரி பற்றிய தீர்மானத்தை ஐ. நா.-வில் எதிர்த்தது ஏன்?

மக்கள் சபையில் பண்டிதர் சப்பைக்கட்டு

"ஹங்கேரி பற்றி ஐ. நா-வில் பாகிஸ்தான் முதலிய சில நாடுகள் தீர்மானம் ஒன்று கொண்டுவந்தன; அதை இந்தியா எதிர்த்தது காரணம், அந்தத் தீர்மான வாசகங்கள் சரிவர அமையவில்லை. மேலும், தீர்மானம், 'ஐ நா—வின் மேற்பார்வையில் ஹங்கேரியில் தேர்தல் நடத்த வேண்டும்' என்பது; இதனால் இதை எதிர்த்தோம். இதுகுறித்து சிலர் கண்டனம் எழுதியிருக்கிறார்கள்.

"இந்தத் தீர்மானம் ஐ. நா. சாசனத்திற்கு முரணானது; ஹங்கேரியை ஒரு சுதந்திர நாடு என்ற அந்தஸ்திலிருந்து கீழ் இறக்குவதாகும்.

"இதுபோன்ற அன்னியத் தலையீட்டையும், அன்னிய மேற்பார்வையின்கீழ் தேர்தல் ஏற்பாட்டையும் ஏற்றுக் கொள்வது, ஒரு தீங்கான முன்மாதிரியாகிவிடக் கூடும் என்றும், இந்த முன்மாதிரியை வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் இதர நாடுகளிலும் தலையிட முற்படக் கூடும் என்றும் நாம் கருதியதால்தான் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தோம்,"

என்று பண்டித நேரு மக்கள் சபையில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆந்திர சர்க்கார் ஊழியர்களுக்குக் குடியிருப்புவசதி

தலைநகரில் ரூ. 1·16 கோடி செலவில் திட்டம்

ஐதராபாத், நவ. 14—

சர்க்கார் ஊழியர்கள், அதிகாரிகள், சட்டசபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு வீடு கட்டித் தருவதற்காக," ரூ. 1·16 கோடி செலவு மதிப்பில் திட்டம் ஒன்று தீட்டியிருப்பதாகவும், இந்தத் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படும் என்றும் தெரியவருகிறது.

1,000 வீடுகள் சர்க்கார் ஊழியர்களுக்காகவும், 100 வீடுகள் அதிகாரிகளுக்காகவும், 160 வீடுகள் சட்டசபை உறுப்பினர்களுக்காகவும் கட்டப்படும் என்றும் தெரியவருகிறது.

நிர்வாக இலட்சணம்?

9 மாத காலத்தில் 6,42,339 பேர் டிக்கெட் இன்றிப் பிரயாணம் செய்தனராம்!

புதுடில்லி, நவ. 15—

தென்பகுதி இரயில்வேயில் டிக்கெட் இல்லாப் பிரயாணத்தைத் தடை செய்வதற்காக எடுக்கப்பட்டு வருகிற நடவடிக்கைகளை, இரயில்வே துணை மந்திரி ஓ. வி. அளகேசன் மக்கள் சபையில் கேள்வி நேரத்தில் விவரிக்கையில் 1956 சனவரி—அக்டோபர் கால அளவில் 6,42,339 பிரயாணிகள் டிக்கெட்டில்லாமல் பிரயாணம் செய்ததாகத் தெரிவித்தார்.

டிக்கெட்டுகள் பரிசோதனை முறை இப்போது தீவிரப்படுத்தப் பட்டிருப்பதாகவும், இரயில்களில் பிரயாணம் செய்கிற டிக்கெட் பரிசோதகர்கள் இப்போது குறிப்பிட்ட பகுதிகளில் சேவை செய்வதாகவும், திடீரென அவர்கள் 'கோஷ்டி'களாக வந்து பரிசோதனைகளை நடத்துவதாகவும், குறித்த காலத்துக்கொருமுறை புனர் பரிசோதனை நடத்தப்படுவதாகவும், உத்தியோக உடையில்லாமலேயே பரிசோதகர்கள் சென்னை சுற்றுப்புற இரயில்களில் பரிசோதனைகள் நடத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

உண்மையாகவா?

புதுடில்லி, நவ. 15—

"புதிய தொழில்களைத் துவக்கும் போது, தொழில் துறையில் அபிவிருத்தியடையாத பகுதிகளில் முழு கவனத்தையும் அரசாங்கம் செலுத்தும்"

என்று, மக்கள் சபையில் கனரகத் தொழில் அமைச்சர் ஷா உறுதி கூறியுள்ளார்.

'கிருஷ்ண மேனனுக்கு தகுதி உண்டா?'

'நேரு இனியும் அவரை நம்பலாமா?'

'ஐ.நா.வில் அவர்பேச்சும்செயலும் கண்ணியமாயில்லை'

"நேருஜிக்கோ அல்லது இந்திய சர்க்காருக்கோ நம்பிக்கையான பிரதிநிதியாக இருப்பதற்கு, எந்த அளவுக்குத் திரு வி. கே. கிருஷ்ண மேனனுக்குத் தகுதியுண்டு என்பதைப்பற்றிச் சந்தேகிக்க இடமிருக்கின்றது.

"தமக்குத் தரப்பட்டுள்ள பொறுப்புக்குப் புறம்பாகப் போவதிலும் அவர் ஈடுபடுகின்றார் எனத் தெரிகின்றது.

"ஆராய்ந்து, தேர்ந்து தெளியாத, தவறான பிரத்தியேகக் கருத்துக்களை வாய்த்துடுக்காகக் கொட்டி விடுவதன் மூலம், இந்திய சர்க்காருக்கு சங்கடமான நிலையை அவர் உண்டாக்கி விடுகின்றார் என்பதைப் பொறுப்பில் உள்ளவர்கள் பகிரங்கமாகச் சொல்லாமலே நாம் தெரிந்து கொள்ளலாம்.

"எகிப்தின்மீது பிரிட்டனும், பிரான்சும் இராணுவ நடவடிக்கை எடுத்ததை, மேனன், 'பகிரங்க ஆக்கிரமிப்பு' என்று கூறினர்; ஆனல், ஹங்கேரிய மக்கள் எழுச்சியை நசுக்கவும் அவர்களை ஒடுக்கவும் சோவியத் ரஷ்யா எடுத்த படையெடுப்பை, 'ஹங்கேரிய உள்நாட்டு விவகாரம்' என்று அவர் கூறிவிட்டார்.

"எகிப்துமீது மேற்கு ஐரோப்பிய நாடுகள் எடுத்த படையெடுப்பைக் காட்டிலும், ஹங்கேரியர்கள்மீது சோவியத் படைகள் எடுத்த நடவடிக்கை, ரகத்திலோ தரத்திலோ எந்த வகையிலும் குறைந்ததல்ல என்றுசெய்திகளும் அபிப்பிராயங்களும் தெரிவிக்கின்றன.

"ஆய்ந்தோய்ந்து பார்க்காதவனோடு வைத்துக் கொள்ளுகின்ற தொடர்பு ஆபத்தானது என்பதைப் போலத்தான், மேனனை நம்பி நேருஜி அவரோடு வைத்துக் கொண்டிருக்கும் தொடர்பின் விளைவாகுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கின்றது.

"திரு. மேனனுக்கு ரஷ்யாவின் மீதோ அல்லது அதன் கூட்டாளிகளின் மீதோ பிரத்தியேகப் பாசம் ஏற்பட்டிருக்கலாம்; ஆனல், இந்திய சர்க்கார் எந்தத் தனிப்பட்ட கோஷ்டி நாடுகளுடனும் பாரபட்சமான தொடர்பு கொண்டிருக்கவில்லை என்பதை அவர் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும்.

"ஐ. நா. கூட்டங்களிலும் அவர் நடந்து கொள்வதும் பேசுவதும் கண்ணியமாயில்லை என்பதும் வருந்தற்குரியதெனச் சொல்லப்படுகின்றது.

"இந்திய சர்க்காரின் மதிப்புக்கும் இலட்சியங்களுக்கும் ஏற்ற பிரதிநிதியாக அவர் இருக்கமுடியாது என்கின்ற அபிப்பிராயம் வலுத்து வருவதை, தலைமை இடம் கருத்தில் கொள்வது நல்லது."

—13-11-56 கோவை 'நவ இந்தியா'

வேலை நிறுத்தத்தால் ஏற்பட்ட நஷ்டம்

ராணிகஞ்ச் சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தம் காரணமாக நிலக்கரி உற்பத்தியில் சுமார் $3\frac{1}{2}$ - இலட்சம் டன் நஷ்டமாயிற்றாம்! தொழிலாளர்களுக்குத் தங்களுடைய சம்பளங்களில் மொத்தம் சுமார் ரூ. 25 இலட்சம் நஷ்டமேற்பட்டதாம்!

இந்தியாவில் அணுசக்தி உற்பத்திக்குத் திட்டம்?

"பம்பாயில் நிறுவப்பட்டுள்ள அணுசக்தி உலையிலிருந்து இன்னும நான்கைந்து ஆண்டுகளில் அணுசக்தி உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது" என்று பண்டித நேரு மக்கள் சபையில் அறிவித்துள்ளார்.

வடபகுதி இரயில்வேயில் பிரயாணிகள் நலனுக்கு!

ரூ. 2,30,00,000 செலவிடப்படும்

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வட பகுதி இரயில்வேயில் பிரயாணம் செய்வோர் சௌகரியங்களுக்காக ரூ. 2,30,00,000 செலவிடப்படும்; எந்தெந்த நிலயங்களில் என்னென்ன வேலைகளை நடத்தவேண்டும் என்ற விவரங்கள் 1956—57, 1957—58 ஆண்டுகளுக்கு நிர்ணயிக்கப்பட்டு விட்டன; மீதி ஆண்டுகளுக்கு இனிமேல் விவரம் தயாரிக்கப்படும்; முக்கியமாக, கீழ் வகுப்பு பிரயாணிகளின் சௌகரியமே கவனிக்கப்படும்" என்று மக்கள் சபையில் இரயில்வே துணை அமைச்சர் அறிவித்துள்ளார்.

வ. ஆ. மாவட்டத்தில் அண்ணா

திமிரி, விரிஞ்சிபுரம் கூட்டத்தில் சொற்பொழிவு

வட ஆற்காடு மாவட்டத்தில், கடந்த திங்கள் இறுதியில், அண்ணா அவர்கள் இரண்டு ஊர்களுக்குச் சென்று அரிய கருத்து விளக்கம் தந்தார்கள். அந்த ஊர்களின் சுற்றுவட்டங்களிலிருந்தெல்லாம் ஏராளமான மக்கள், கூட்டங்களில் கலந்துகொண்டு கருத்துரை கேட்டுப் பயன் பெற்றிருக்கின்றனர்.

திமிரி:

30—10—56 அன்று அண்ணா அவர்கள், திமிரி ஊராட்சி மன்றத்தில் திரு. வி. க. அவர்களின் படத்தைத் திறந்துவைத்து அரியதோர் சொற்பொழிவாற்றினார்.

ஊராட்சி மன்றத்தினர் அண்ணா அவர்களுக்கு வரவேற்பு இதழ் ஒன்று வாசித்தளித்து மகிழ்ந்தனர்; அண்ணா அவர்கள் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி கூறினார்கள்.

பொதுக்கூட்டம்

அன்று மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் தலைமை தாங்கினார்.

தோழர்கள் கருத்தோவியன், போளூர் சுப்பிரமணியம் ஆகியோர் சிறிது நேரம் பேசியதும், அண்ணா அவர்கள், 'நாம் மதத்திற்கோ, கடவுளுக்கோ, பார்ப்பனர்களுக்கோ விரோதிகள் அல்ல; மதம் தூய்மையானதாக, ஆண்டவன் ஒருவனாக இருத்தல் அவசியம்,' என்பதை விளக்கியும், காங்கிரஸ்தான் இன்று நமது கழகத்திற்கு மட்டுமின்றி, பொதுவாக எல்லா மக்களுக்கும் விரோதியாக விளங்குகிறது' என்பதை எடுத்துரைத்தும் அரியதோர் சொற்பொழிவாற்றினார்.

பல மன்றங்கள், கிளைக் கழகங்கள், தனிப்பட்ட தோழர்கள் சார்பில் அண்ணா அவர்களுக்கு மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

கூட்டத்தில் விளாப்பாக்கம் தி. மு. கழகச் சார்பில் ரூ. 83 5·9; உண்டியல் மூலம் வசூலான ரூ. 10—12—9 தேர்தல் நிதிக்காக அளிக்கப்பட்டது.

செதுவாலை:

விரிஞ்சிபுரம் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக 31–10–56 அன்று அண்ணா அவர்கள் செல்லும்போது, செதுவாலை தி. மு. கழகத் தோழர்கள் அண்ணா அவர்களை வரவேற்று, கைத்தறி ஆடையும் மலர்மாலையும் அணிவித்து மகிழ்ந்தனர்.

அண்ணா அவர்கள் தோழர்களோடு கழக வளர்ச்சி குறித்தும், நிலைமைகள் குறித்தும் சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்துவிட்டு, விரிஞ்சிபுரம் புறப்பட்டார்கள்.

விரிஞ்சிபுரம்:

விரிஞ்சிபுரத்திற்கு 31–10–56 அன்று மாலை வந்து சேர்ந்த அண்ணா அவர்கள், விரிஞ்சிபுரம் தி. மு. கழகத்திற்கான அலுவலகத்தைத் திறந்துவைத்துத் தோழர்களை மகிழ்வித்தார்கள்.

மாலை 7 மணியளவில், ஆற்றுத் திடலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு தோழர்மார்க்கபந்து தலைமை தாங்கினார்.

தோழர்கள் கருத்தோவியன், பூஞ்சோலை, போளூர் - சுப்பிரமணியம ஆகியோர் சிறுதுநேரம் கழகக் கொள்கைகளை விளக்கியும்; இலட்சியத்தை எடுத்துரைத்தும் பேசிய பின், அண்ணாஅவர்கள், கழகத்தின் சமுதாய—பொருளாதார — அரசியல் கொள்கைகளை விளக்கியும், இன்றுள்ள காமராசர் சர்க்கார் எப்படி தமிழர் நலன்காக்கத் தவறிவிட்டது என்பதை எடுத்துரைத்தும் சீரியதோர் கருத்துரை ஆற்றினார்கள்.

கூட்டத்தில் கழகத் தேர்தல் நிதிக்காக கே. வி. கே சாமி மன்றம் ரூ. 1; காட்பாடி தோழர் ஒருவர் ரூ. 1—0—6; குடியேற்றம் கைத்தறி நெசவாளர் சங்கம் 101 காலணா; கீழ்வைத்திணங்குப்பம் தி. மு. க. ரூ. 2; ஷெரீப் ரூ 1; விரிஞ்சிபுரம் தி. மு. கழகம் ரூ. 50—அண்ணா அவர்களிடம் தரப்பட்டது.

திரு. வி. க. நகர் குடிசை வாழ்வோர் சங்கம்

சர்வகட்சி நடவடிக்கைக் குழு அமைப்பு

சென்னை, நவ. 16—

சென்னை திரு. வி. க. நகரை சேரியாகப் பிரகடனம் செய்யுமாறும், அங்கு கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்த உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் சர்க்காரைக் கேட்டுக்கொண்டு, திரு. வி. க. நகர் குடிசை வாழ்வோர் சங்க ஆதரவில், கடந்த 11-ந் தேதியன்று திரு எஸ். கிருஷ்ணமூர்த்தி, எம் ஏ., தலைமையில் நடைபெற்ற நடவடிக்கைக் குழு அமைப்புக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் சர்வ கட்சியினரும் பங்கேற்றனர்.

சுகாதார வசதியில்லாத எல்லா குடிசைப் பகுதிகளையும் சேரிகள் என்று பிரகடனம் செய்து, அங்கு சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்று சர்க்காரை வற்புறுத்தி சர்வகட்சியினரும் பேசினர்.

பின்னர் நடவடிக்கைக் குழுத் தலைவர், கன்வீனர், உறுப்பினர்கள் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (ந - தி.)

தேர்தல் நிதி தாரீர்!

		ரூ. அ. பை
வரவு :		
முன் (17—10—56) இதழ்ப்படி.	....	3754—7—6

கோவை நகரில்:

தேர்தல் ஆய்வுக் குழுவினரிடம் அளித்த தோழர்கள்

கோவைநகர்-எ. இராமசாமி,	....	2—0—0
கோவை-8–வது வட்டம் கனகரத்தினம்,	....	1—0—0
சாக்கு—பை தொழிலாளர்கள்	....	5—5—0
பாப்பநாய்க்கன்பாளையம் தி. மு. கழகம்	....	3—0—0
உடுமலை-பி. பழனிச்சாமி	....	3—0—0
,, பி. விசுவநாதன்	....	1—0—0
இரா. வே. துரைசாமி	....	1—0—0
மலையாண்டிப்பட்டினம்-ம. ப. ஆறுமுகம்	....	5—0—0
தென்சித்தூர்-எஸ். வி. சம்பந்தம்	....	1—4—0
சங்கம்பாளையம்-எஸ். வி. அரசு	....	1—4—0
,, சாமித்துரை	....	1—4—0
,, நடராஜ்	....	1—4—0
வி. டி. முத்துச்சாமி	....	1—0—0
துங்காவி-பழனிச்சாமி	....	1—0—0
கே. வி. நாச்சிமுத்து	....	0—8—0
மீனாட்சிபுரம் தோழர்	....	1—0—0

கரூரில்:

தேர்தல் ஆய்வுக்குழுவினரிடம் பல தோழர்கள் சார்பில் அளித்தது	....	78—0—0
வேலாயுதம்பாளையம்-இராசமாணிக்கம்	....	5—0—0

மதுரை நகரில்:

தேர்தல் ஆய்வுக் குழுவினரிடம் அளிக்கப்பட்ட நிதி விவரம் :-

மதுரை-ஆ. இரத்தினம்	....	100—0—0
கொண்டையம்பட்டி-எஸ்.வி.ஆர்.மலைச்சாமி	....	10—0—0
மேலூர்-அன்புமணி	....	1—0—0
சோழவந்தான்-எஸ். செல்லத்துரை	....	1—0—0
,, குருசாமி	....	0—8—0
,, முருகு செழியன்	....	1—0—0
மதுரை-எல். கே. எஸ். மணி	....	1—0—0
மது. பழனியப்பன்	....	1—0—0
இரா. முருகேசன்	....	0—4—0

விருதுநகரில்:

தேர்தல் ஆய்வுக் குழுவினரிடம் அளித்த தோழர்கள்

தனுஷ்கோடி-மாசிலாமணி	....	1—0—0
இராமநாதபுரம்-பாண்டியன்	....	0—8—0
முதுகளத்தூர்-அலியார்	....	5—0—0
செங்குன்றபுரம்-மு. குருசாமி	....	0—8—0
,, க. குருசாமி	....	0—8—0
,, இரா. வெள்ளச்சாமி	....	0—8—0
தாயில்பட்டி-சுப்பிரமணியம்	....	1—0—0
விருதை-கே. திரவியம்	....	1—0—0
மீசலூர்-அரங்கநாதன்	....	10—0—0
விருதை-சந்தானம்	....	1—0—0
வி. பி. வடிவேலு	....	10—0—0
விருதுநகர்-கே. சுப்பிரமணியம்	...	1—0—0
ஆக மொத்தம்	ரூ.	4,015—0—6

காரைக்குடியில் கழகப் பொதுக்கூட்டங்கள்

ஈ. வெ. கி. சம்பத், அருண்மொழி, வில்வம் கருத்துரை வழங்கினர்

காரைக்குடி நகர தி. மு. கழகக் கிளையின் சார்பில், கடந்த 10, 12-ந் தேதிகளில் காந்தி சதுக்கத்தில் இரண்டு பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன.

10-ந் தேதியன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்குத் தோழர் இளமாறன் தலைமை வகித்தார்.

தலைமையுரைக்குப்பின் தோழர் ஏ. கே. வில்வம் சிறிது நேரம் தி. மு. கழகக் கொள்கை குறித்துப் பேசினார்.

இறுதியில், தோழியர் அருண்மொழி-வில்வம் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

பொதுக்கூட்டத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் திரண்டிருந்தனர்.

12-ந் தேதியன்று நடைபெற்றக் கூட்டத்திற்குத் தோழர் உ. சீனிவாசன் தலைமை தாங்கினார்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், தி. மு. கழகத்தை இழித்தும் பழித்தும் பேசிவரும் மாற்றாரின் போக்கை எடுத்துக்காட்டியும், மக்களிடத்தில் கழகத்திற்கு மதிப்பில்லாமல் செய்துவிடலாம் என்று மாற்றார் நினைத்து ஏமாறவேண்டாம் என்று எச்சரித்தும், காங்கிரஸ் கட்சியின் முரண்பட்ட வாதங்களை விளக்கியும், வருகிற பொதுத் தேர்தலில் இவர்களுக்கெல்லாம் மக்கள் நியாயமான தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

கூட்ட இறுதியில் தோழர்கள் கே. வி. கே. சாமி, சங்கரலிங்கனார், சிவசங்கரபாண்டியன் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ச. தி.)

ஏத்தாப்பூரில் தி. மு. க. துவக்க விழா

அண்ணா, என். வி. நடராசன், ஈ.வெ.கி. சம்பத் கலந்துகொண்டனர்

சேலம் மாவட்டம் ஏத்தாப்பூர் தி. மு. கழகத் துவக்க விழா 13—11—56 மாலை சிறப்புற நடந்தேறியது. ஏராளமான பொது மக்கள் திரண்டிருந்தனர்.

சேலம் மாவட்டச் செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமை வகித்தார்.

மாலை 6 மணிக்கு ஏத்தாப்பூர் கடை வீதியிலிருந்து அண்ணா அவர்களையும், விழாவில் கலந்துகொள்ள வருகை தந்திருந்த துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், ஜி. பி. சோமசுந்தரம், எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ. ஆகியோரையும் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். வழி நெடுக வளைவுகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இரவு 7 மணிக்கு விழா நிகழ்ச்சி துவங்கப்பட்டது.

தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ. அவர்கள் கழகக் கொடியை ஏற்றிவைத்துக் கொள்கையினை விளக்கிப் பேசினார்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கழகத்தைத் துவக்கிவைத்து, கடந்த ஆண்டுகளில் கழகம் ஆற்றியுள்ள பணியினை விவரித்துக் கூறியதுடன், தேர்தல் நிதிக்கு அனைவரும் உதவுமாறும் கேட்டுக் கொண்டார்.

அடுத்தபடியாக தோழர் ஈ. வெ கி. சம்பத் அவர்கள் காங்கிரஸ் ஆட்சியின் அநீதிகளையும், அதிலிருந்து மக்கள் விடுபட்டு நல்வாழ்வு பெற திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுள்ள குறிக்கோளையும் விளக்கிப் பேசினார்.

இறுதியாக அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுகையில், திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் போட்டியிட முன்வந்திருப்பது ஏன் என்பதை விளக்கியும், இம்முயற்சியினை வெற்றியுறச் செய்ய மக்கள் ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டும், திராவிட முன்னேற்றக் கழகம் தாயகத்தின் விடுதலைக்காகப் பணியாற்றும் இயக்கமென்பதையும் விவரித்துப் பேசினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இனிது முடிவுற்றது.

ஏத்தாப்பூர் தி. மு. கழகச் சார்பில் ரூ. 25; ஆத்தூர் தி. மு. கழகச் சார்பில் ரூ. 50; சில தோழர்கள் சேர்ந்து ரூ 3—3—0; மற்றும் பல கழகத் தோழர்கள் ரூ. 10 தேர்தல் நிதிக்காக அண்ணா அவர்களிடம் அளித்தனர்.

அழகப்பா கல்லூரிகளில் சம்பத்

'விஞ்ஞானமும் நாமும்' பற்றி சிறப்புச் சொற்பொழிவு

தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்கள் தன் சுற்றுப்பயணத்தில் காரைக்குடிக்கு வந்திருந்தபோது, அழகப்பா கல்லூரிப் பகுதிகளான பொறியியற் கல்லூரி, பல்தொழிலியற் கல்லூரி, கலைக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, உடற்பயிற்சிக் கல்லூரி, மாதிரி உயர்நிலைப் பள்ளி ஆகியவைகளையும், பவநகர் ஸ்டேடியத்தையும் மத்திய விஞ்ஞான இரசாயன ஆராய்ச்சி நிலையத்தையும் பார்வையிட்டார்

தோழர் சம்பத் அவர்களை, கல்லூரி முதல்வர்களான திரு வெங்கண்ணா, சா பால், ஏ என் தம்பி, துரைக்கண்ணு, கல்லூரி மாணவர் தலைவர்கள், பொறியியற்கல்லூரித் தமிழ்க் கழகத் தலைவர், செயலாளர்கள் ஆகியோர் வரவேற்றனர்.

அத்துடன் பொறியியற்கல்லூரி, பல்தொழிலியல் கல்லூரிகளின் தமிழ்க் கழகச் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் சம்பத் அவர்கள் 'விஞ்ஞானமும் நாமும்' எனும் பொருள் பற்றி விளக்கவுரையாற்றினார்.

சம்பத் அவர்களின் சொற்பொழிவைக் கேட்ட கல்லூரி முதல்வர்களான திரு. சா. பால், வெங்கண்ணா ஆகியோர் 'அவருடைய சொற்பொழிவுகள், கல்லூரிகளின் பேச்சுச் சரித்திரத்திலேயே புதியதொரு மாறுதலை மாணவர்களுக்கு ஏற்படுத்திவிட்டன' என்று பாராட்டினார்கள்.

கூட்டத்தில் கல்லூரி மாணவர்களும் பொதுமக்களும் திரண்டிருந்தனர். (ச. தி.)

சுலபமான முறையில் நீர்வளிக் குண்டு தயாரிப்பு

லண்டன், நவ. 15—

நீர்வளிக்குண்டை சுலபமான முறையில் தயாரிப்பதற்குப் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் தற்செயலாக ஒருவழி கண்டுபிடித்துள்ளனராம். 'லண்டன் டைம்ஸ்' கூறுகிறது.

சென்னை—இராயபுரம் இளைஞர் மணி மன்றம்

11-11-56 காலை சென்னை இளைஞர் மணி மன்ற கால் பந்தாட்டச் சங்கத்தில் நடைபெற்ற வருடாந்திரக் கூட்டத்தில் மன்ற நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்—பாதுகாப்பாளர்: பால்ஸ் பரமானந்தம்; தலைவர்: சூரியன்; செயலாளர்: ஜி கோவிந்தராஜ்; துணைச் செயலாளர்: ஓய். ஞானம்; கேப்டன் டி. இராமதாஸ்; துணை கேப்டன்: எல். செல்வராஜ்; பொருளாளர்: பி. எஸ். மணி. உறுப்பினர்கள்: பி. குணசீலன், எஸ். இராமநாதன், எம். நாராயணன், என். இராதாகிருஷ்ணன், ஆர். பாஸ்கரன், சி. ஞானசேகரன்.

கூட்ட இறுதியில், இராயபுரத்தில் இளைஞர்கள் விளையாடுவதற்கென நல்ல விளையாட்டு முற்றம் அமைத்துத் தருமாறு நகரசபை கமிஷனரைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'காமன்வெல்த்திலிருந்து இந்தியா உடனே வெளியேற வேண்டும்'

சென்னை சர்வ கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

18—11—56 மாலை 6 மணியள வில், சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில், 'நவ. 18: காமன் வெல்த் எதிர்ப்பு தின'த்தை ஒட்டி சர்வ கட்சிப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

தோழர் எச். டி. இராசா எம்.பி. கூட்டத்திற்குத் தலைமை வகித் தார்.

தோழர்கள் சுப்பிரமணியம் (பி. சோ), முத்தையா (கம்யூ.), ஆர். இராமநாதன், காஞ்சி-கல்யாணசுந்தரம் (தி மு. க.), கே. அருணாசலம், தோழியர் எஸ். விசயலட்சுமி (பி. சோ.) கே. முருகேசன் ஆகியோர் காமன்வெல்த்திலிருந்து இந்தியா விலக வேண்டியதின் காரணங் களை எடுத்துக்கூறி, உடனே இந் தியா காமன்வெல்த் சபையிலிருந்து விலக நேரு முன்வர வேண்டு மென்று வற்புறுத்தியும் சொற் பொழிவாற்றினர்.

இறுதியில் தி. மு கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், காமன்வெல்த்திலிருந்து இந்தியா விலக வேண்டுமென்று கடந்த 1951-ல் நடைபெற்ற கழக முதல் மாநில மாநாட்டிலேயே தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைச் சுட்டிக் காட்டியும், எல்லா உலக நாடுகளுக் கும் பொதுவான ஒரு நிறுவனமாக ஐக்கிய நாடுகள் சபை இருக்கும் போது, காமன்வெல்த், சீட்டோ, நேட்டோ போன்ற சிறுசிறு ஏகாதிபத்திய அமைப்புகள் தேவையற்றவை என்பதைச் சுட் டிக் காட்டியும், வெளிநாட்டுத் துறையில் நேரு சர்க்கார் பல தடவைகள் தவறுகள் செய்திருக் கின்றன என்பதை எடுத்துக்காட் டியும், இந்தத் தடவையாவது அந் தத் தவறுக்கு ஆளாகாமல் உடனே காமன்வெல்த்திலிருந்து இந்தியா வெளியேற வேண்டுமென்று வற் புறுத்தியும் சொற்பொழிவாற்றி னார்.

கூட்டத்தில், 'காமன்வெல்த் அமைப்பில் இந்தியா இணைந்திருப் பதால் இந்தியாவிற்கு ஒருவித அனுகூலமும் இல்லை; பொருளா தாரத் துறையிலோ, அரசியல் துறையிலோ எவ்வித நன்மையு மில்லை; அந்த அமைப்பில் இணைந் திருப்பதால் இந்த நாட்டுக்கு மேலும் இழுக்கு ஏற்படும் என்ப தால், காமன்வெல்த்திலிருந்து இந் தியா விலகவேண்டும்' என்று வற் புறுத்திக் கேட்டுக்கொள்ளும் தீர் மானமொன்று படிக்கப்பட்டது; கூடியிருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்களின் நீண்ட கைதட்ட லுடன் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இறுதியில், தலைவர் திரு எச். டி. இராசா முடிவுரைக்குப்பின், தோழர் இரத்தினவேலு நன்றி கூறினார். சுமார் 8½ மணியளவில் கூட்டம் இனிது முடிவுற்றது.

தீர்ந்துபோன பிரச்சினையாகிவிட்டதாம்!

ஸ்ரீநகர், நவ. 18—

'ஜம்மு—காஷ்மீர் மாநிலம் இந் தியாவின் ஒரு பகுதியே' என்று பிரகடனம் செய்யும் அந்த மாநிலத் தின் அரசியல் திட்டத்தை, அரசி யல் நிர்ணய சபை இறுதியாக அங்கீகரித்துவிட்டதாம். இத்து டன் காஷ்மீர் இணைப்பு பிரச்சினை தீர்ந்துபோன விஷயமாகிறது என்று கருதப்படுகிறது.

தகராறு முற்றுகிறது

நியூயார்க், நவ. 17—

'காஷ்மீர் இந்தியாவின்பகுதியே' என்ற அரசியல் நிர்ணய சபையில் நிறைவேறியுள்ள திட்டத்தை ஆட் சேபித்து பாகிஸ்தான், ஐ.நா.-வின் பந்தோபஸ்து குழுவின் கவனத் திற்குக் கொண்டுவந்துள்ளதாம்.

அரிசி விலை உயர்வுக்குக் காரணம் என்ன?

சென்னை, நவ. 16—

இந்த மாநிலத்தில் அரிசி உற் பத்தி போதிய அளவிற்கு இருக் கிறதென்றும், மற்ற மாநிலங்களின் தேவையே இந்த விலை உயர்வுக் குக் காரணமாக இருக்கிறதென் றும், அதைத் தடைசெய்வது சாத்தியமில்லையென்றும் அமைச் சர் பக்தவத்சலம் கூறியுள்ளார்.

அரிசி விலை இறங்குவதற்கு அர சாங்கம் தன்னால் இயன்றதையெல் லாம் செய்து வருகிறதாம்; இதற் காகவே சென்னை நகரில் பல இடங்களில் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளனவாம்.

மாநிலத்திற்கு மாநிலம் அரிசி போக்குவரத்தைக் கட்டுப்படுத்த இயலவில்லையென்பதையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

கு. தா. பணிக்கம்பட்டிக்கு அண்ணா வருகை

20-11-56-ல், திருச்சி மாவட் டம் கு. தா. பணிக்கம்பட்டி யில் தோழர் நல்லுசாமி தலை மையில் கிளைக் கழகக் கட்டி டத் திறப்புவிழா நடைபெறும். அண்ணா அவர்கள் கட்டிடத் தைத் திறந்து வைப்பார்.

தோழர் எம். எஸ். மணி கழகக் கொடியேற்றுவார்.

தோழர் அன்பில் தருமலிங்கம் கே. வி. கே. சாமி படத்தைத் திறந்து வைப்பார்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் சொற் பொழிவாற்றுவார்.

கழகக் கூட்டம்

★

நரசிங்கபுரம் :

21—11—56 மாலை 5 மணிக்கு

தலைவர் : டி. என். ஆரையப்பன்

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு

எஸ். எஸ். இராசேந்திரன்

தி. ந. சம்பந்தம்

வி. சிவப்பிரகாசம் தம்பதிகளுக்கு தேநீர் விருந்து

தி. மு. கழகத் தலைமை நிலையத்தில் சிறப்பான நிகழ்ச்சி

சென்னை, நவ. 18—

அண்மையில் திருமணம் புரிந்து கொண்ட சேலம் வழக்கறிஞர் வி. சிவப்பிரகாசம்—பரமேசுவரி ஆகியோருக்கு தி. மு. கழகத் தலைமை நிலையத்தின் சார்பில், இராயபுரம் 'அறிவக'த்தில், 14—11—56ல் தேநீர் விருந் தொன்று நடைபெற்றது.

விருந்திற்கு, கழக முன்னணி வீரர்கள் பலரும், மாணவர் கழகத் தோழர்களும் வந்திருந்தனர்.

தேநீர் அருந்தியதும், பொதுச் செயலாளர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் தோழர் சிவப்பிரகாசம் அவர்கள் மாணவப் பருவத்தி லிருந்தே கழகத்தோடு கொண் டிருந்த தொடர்புகளை எடுத்துச் சொல்லி, அவர் மணம் புரிந்து கொண்டுள்ளது கண்டு கழகத்தி னர் மகிழ்ச்சியைத் தெரிவிக்கவே இந்த விருந்து என்றுரைத்து, சிவப்பிரகாசம் அவர்களுக்கு மாலை அணிவித்து, வாழ்த்துதலைத் தெரி வித்துக்கொண்டார்.

தி. மு. கழக மாணவர் கிளை அமைப்பாளரான தோழர் டி. கே. பொன்னுவேலு அவர்கள், மாண வர் கழகத்திலிருந்து தோழர் சிவப் பிரகாசம் அவர்கள் ஆற்றிய தொண்டினைப் பாராட்டியும், நன்றி தெரிவித்தும் சிறிது நேரம் பேசி விட்டு, சிறந்த 'மேசை விளக்கு' ஒன்றினை மாணவர் கழகத்தின் சார்பில் பரிசாகவும் வழங்கினர்.

தோழர் சிவப்பிரகாசம் அவர் கள் தனது திருமணத்தை ஒட்டி கழகம் அளித்த விருந்துக்கும் வாழ்த்துக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் விழா வெற்றிகரமாக முடிய ஒத்துழைத்த அனைவருக்கும் புதுமணத் தம்பதி களுக்கும், விருந்துக்கு வந்து சிறப் பித்த அனைவருக்கும் நன்றிகூற விழா இனிது முடிவுற்றது.

(ர. கி.)

அரசாங்கத்தைக் கவிழ்க்க சதி செய்தார்களாம்!

ஜாகர்த்தா, நவ. 15—

சென்ற ஆண்டு மாதத்தில் சில இராணுவ அதிகாரிகளும் அரசி யல் தலைவர்களும் சேர்ந்து அர சாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய் ததாகவும், அதைக் கண்டுபிடித்து சம்பந்தப்பட்டவர்களை தண்டித் துள்ளதாகவும் அரசாங்கக் கட்சி இதழ் கூறியுள்ளது.

பி. சி. ஜி. இயக்கம்

டில்லி அமைச்சர் தரும் தகவல்

புதுடில்லி, நவ 16—

பி. சி. ஜி. தடை மருந்து குத் தும் இயக்கத்தின்கீழ் 1956-ம் ஆண்டு செப்டம்பர் வரையில் மொத்தம் 1 37,13 102 பேர் காச நோய் பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டதாகவும், மொத்தம் 51 82 304 பேருக்கு தடைமருந்து குத்தப்பட்டுள்ளதாகவும் மத்திய சுகாதார அமைச்சர் அமிர்த கௌரி மக்கள் சபையில் தெரிவித் துள்ளார்.

காமன்வெல்த்திலிருந்து இந்தியா வெளியேறக்கூடாதாம்!

காரணம் கூறுகிறார் ஜெயப்பிரகாஷ்

சென்னை, நவ 18—

"எகிப்திய பிரச்சினைக்காக காமன்வெல்த் உறவுகளை, இந்தியா துண்டித்துக் கொள்ளக்கூடாது"

என்று, ஜெயப்பிரகாஷ் நாராய ணன் கருத்துத் தெரிவித்திருக் கிறாராம்.

தானும், தனது பி. சோ. கட்சி யும், 'காமன்வெல்த்தில் இந்தியா இருக்கக்கூடாது' என்ற கொள்கை யுடையவர்கள்தான் என்றும், ஆனால், எகிப்தைமீது பிரிட்டன் ஆக்கிரமித்தது, காமன்வெல்த்தி லிருந்து இந்தியா வெளியேறுவதற் குரிய பிரச்சினையல்ல என்றும் அவர் கூறினாராம்!

"பிரிட்டிஷ் சர்க்கார் எகிப்து மீது மேற்கொண்ட நடவடிக் கையை, பிரிட்டிஷ் மக்களில் சரிபாதி பேருக்குமேல் எதிர்த் துக் கண்டனம் செய்திருக் கின்றனர்; சர்க்கார் செய்த தவறுக்கு, பிரிட்டிஷ் மக்கள் தண்டிக்கப்படக்கூடாது"

என்று, ஜெயப்பிரகாஷ் விளக்கம் கூறியிருக்கிறார்.

டில்லி நிதி அமைச்சர் கட்டும் 'தேன்கூடு'

சென்னை, நவ. 19—

'இந்தியாவின் பல்வேறு திட்டங் களுக்குப் பணம் தேடும் பொறுப்பை என்னிடம் ஒப் படைத்துள்ளனர். எனக்கும் அப்பணத்தை எங்கிருந்து பெறு வது என்று தெரியும்; ஆனால் அதைக் கொஞ்சம் கொஞ்சமாக —தேனீக்கள் கூடுகட்டுவதைப் போல் நிதானமாகச் செய்வேன்" என்று, மத்திய அரசாங்க நிதி அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் கூறியுள்ளார்.

சட்டக் கல்லூரி தமிழ் இலக்கியப் பேரவைச் சிறப்புக் கூட்டம்

★

21-11-56 மாலை 5 மணிக்கு, சென்னை சட்டக் கல்லூரி இலக்கியப் பேரவையின் சார் பில், கல்லூரி மண்டபத்தில், சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெறும்.

தோழர் மு. கருணாநிதி 'இலக்கி யத்தில் வீரம்'; தோழர் கண்ணதாசன் 'இலக்கியத்தில் காதல்'; நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி 'மலாயா தமிழர்கள்'—என்னும் தலைப்பு களில் சொற்பொழிவாற்றுவர். பேராசிரியர் பழனிச்சாமி அவர் கள் தலைமை தாங்குவார்.

என். வி. நடராசன் முழக்கம்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஐ. நா. பலம் வாய்ந்திருக் கிறதென்பதைக் காணா நாமெல்லாம் உண்மை யிலேயே பெருமைப்படு கிறோம். ஏனென்றால், 1945ல், சான்பிரான்சிஸ்கோ வில் ஐ. நா. சபை உருவாக் கப்பட்டபோது, இந்தியத் தூதுகோஷ்டியின் தலைவராக இருந்தவர் நமது தமிழ் நாட் டைச் சேர்ந்த டாக்டர் ஏ. இராமசாமி அவர்களா கும். அவருடைய அரும் பெரும் பணிதான் நமக்கும், நமது நாட்டுக்கும், மற்றும், உலக நாடுகளுக்கெல்லாம் பாதுகாப்புத் தரும் ஒரு உய ரிய கழகமாக உருவாகி வளர்ந்திருக்கிறது.

எந்த அமைப்பிடம் நம்பிக்கை காட்ட வேண்டும்?

'இந்த நேரத்திலும் நாம் எல்லா அரசுகளுக்கும் நினைவூட்டுவதெல் லாம், அகில உலக நாடுகளுக்கெல் லாம் ஒரு பாதுகாப்புக் கழகமாக இருக்கும ஐக்கிய நாடுகள் சபை யிடம் நம்பிக்கை காட்டவேண்டுமா அல்லது ஏகாதிபத்திய அரசுகளின் பிடியிலிருக்கும் காமன் வெல்த் போன்ற சிறு சிறு அமைப்புகளில் நம்பிக்கை காட்டவேண்டுமா என் பதை உணர்ந்து பார்க்கவேண்டு மென்பதுதான்.

'அந்த வகையில், வெளிநாட்டுத் துறையிலே இதுவரையிலும் பல முறை தவறுகளை இழைத்துவந் திருக்கிற நேரு சர்க்கார், இந்தத் தடவையாவது மற்ற நாடுகளுக்குப் புத்தி புகட்ட, இந்தியாவை காமன் வெல்த்திலிருந்து வெளியேறுமாறு நேரு பண்டிதரை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

" இன்றைக்கு இருக்கிற நிலை யில், உலகம பூராவிலுமுள்ள நாடுகளில் எல்லாம், அங் குள்ள மக்களிடையே — 'இது நமது நாடு' என்ற உணர்ச்சி வளர்ந்து வருவ தைக்காண்கிறோம். 'எனக்கு என்று ஒரு நாடு; என்னு டைய நாட்டிற்கு ஒரு தேசிய எல்லை வேண்டும்' என்றெல்லாம் மற்ற மற்ற நாடுகள் கூறிவருவதை நாம் கேட்டுவருகிறோம். அந்த உணர்ச்சி, நம்மிடையேயும் —தமிழக மக்களாகிய நம்மி டமும் இருக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கி றேன். நம்மிடையே வேறு பாடுகள் பல இருக்கலாம்; ஆனாலும், நம்முடைய வேறு பாடுகளையெல்லாம் மறந்து விட்டு, 'நம் தாய் நாடு; இங்கிருப்பவர்களெல்லாம் நமது சகோதரர்கள்' என்ற உணர்வும், அதையடுத்து, 'நம்முடைய நேச நாடுகள்' என்ற பாசமும், அதன் பின்னால் 'நாமெல்லாம் உலக முழுமையிலும் ஒரு அங்கம்' என்ற உணர்வும் நம்மி டையே வளர வேண்டும்.

"நாம் யாருக்கும் அடிமைப் பட்டவர்களல்ல என்ற உணர்ச்சியும் நம்மிடையே உருவாகவேண்டும். அந்த அளவில்—உலகத்தில் நாமும் ஒரு அங்கம் என்ற முறை யில் இந்தியா ஐ. நா. சபை யில் உறுப்பினராக இருக் கும்போது காமன்வெல்த் போன்ற சிறுசிறு அமைப்பு களில் இருக்கத்தேவையில்லை என்பதைக் கூறிக்கொள் கிறேன்."

விடுதலை இயக்கத்தில் பங்கு பெற்றதால்!

14 ஆண்டுகள் சிறைவாசம்

கோவாவிலுள்ள போர்ச்சுகீசிய இராணுவ நீதிமன்றம், கடந்த 8 மாத காலமாகப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த மிஸ். சாந்தா ஹெகிடே என்ற 22 வயதுள்ள இளம் பெண்மணிக்கு இப்போது 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது. அப்பெண்மணி செய்த ஒரே 'குற்றம்', கோவா விடுதலை இயக்கத்தில் பங்குகொண் டதுதான்!

க்ஷயரோக சிகிச்சை வசதி

மேலும் பரவலாக்கப்படுகிறது

புதுடில்லி, நவ. 17—

இந்திய இரயில்வே ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினரிடை க்ஷயரோக நோயாளிகளுக்கு அளிக் கப்பட்டுவரும் வசதியைப் பரவ லாக்குவதெனத் தீர்மானிக்கப்பட் டுள்ளது. தற்போதுள்ள 495 - படுக்கைகளுக்குப் பதிலாக 870 - படுக்கைகள் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள் ளப்படுமாம்.

இப்போது எதுவும் கூறுவதற்கில்லையாம்!

புதுடில்லி, நவ. 14—

துணி விநியோகம் — தேவை ஆகிய நிலைபற்றி அடிக்கடி பரி சீலனை நடத்தப்பட்டு வருகிறதென் றும், ஆனால் ஆலைகளுக்கு ஒதுக்கப் பட்டுள்ள துணி உற்பத்தி வரம்பை பழைய அளவுக்கு அதிகரிப்பதா அல்லது வேண்டாமா என்பது பற்றித் தாம் இப்போது எதுவும் கூறுவதற்கில்லை என்றும் உப யோகப் பொருள் உற்பத்தித் தொழில் மந்திரி நித்தியானந்த கனுங்கோ, மக்கள் சபையில் கூறி யுள்ளார்.

கண்துடைப்பு?

சென்னை, நவ. 17—

ஏராளமான அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது என்றும், சீக் கிரமே விலை குறைந்துவிடும் என் றும் உணவு இலாகா அதிகாரி அறி விக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக் காக தோழர் இரா. நெடுஞ் செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறு கிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ் செழியன் எம். ஏ.